# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:12/பேரூ/2024**
**நாள் : 13.11.2025**

S. நாராயணசாமி,
நரசிம்மநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம், 2/11, ஜோதி காலனி என்ற முகவரியை சேர்ந்த திரு. S. நாராயணசாமி என்பவரது 10.06.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.06.2024 அன்று பெறப்பட்டு, 12/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம், 2/11, ஜோதி காலனி என்ற முகவரியை சேர்ந்த திரு. S. நாராயணசாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்துள்ள தனது 10.06.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

1) கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட S.F. No.376–ல் 44-வது சைட்டில் இறகு பந்து உள் விளையாட்டு அரங்கத்திற்கு குடியிருப்பு பகுதியில் அதிகாலை 4.30 மணியிலிருந்து இரவு 11.00 மணிவரை ஒரே கூச்சலும் குடியுமாக குடியிருப்பு சாலையில் வண்டிகளை வீடுகளுக்கு முன்புறம் நிறுத்திவிட்டு தினந்தோறும் ரகளையில் ஈடுபடுகிறார்கள். அனுமதி வழங்கிய பேரூராட்சியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

2) S.F. No.377–ல் தேசிய நெடுஞ்சாலையின் அருகில் காவேரி காபி என்ற உணவகத்திற்கு வாகனங்கள் நிறுத்துமிடம் (parking space) முறையாக விடப்பட்டுள்ளதா என்று பேரூராட்சியின் மீது விசாரணை நடத்தி தவறுதலாக அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அனுமதி ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3) S.F. No.377–ல் மேற்குப் பகுதியில் விநாயகர் கோவில் உள்ளது. கோவிலுக்கு ஒட்டினால் போல் 20 அடி அகலம் கொண்ட நீர்வழிபாதை உள்ளது. அதன் மீது கட்டிடம் கட்டப்பட்டு E.B. ஆபீசுக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அரசு இடத்திற்கு அரசுக்குச் சொந்தமான E.B. நிர்வாகம் வாடகை தருவது முற்றிலும் தவறு. அந்த வாடகை பெறுபவர்கள் மீதும் கட்டிடம், கட்ட அனுமதி வழங்கிய பேரூராட்சியின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மு. ஆனந்தன் என்பவர் தனது 23.05.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.156/2024–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

மனுதாரரின் வீட்டின் அருகில் உள்ள க.ச. எண். 376, மனை எண். 44-ல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இறகு பந்து விளையாடுபவர்கள் சாலையில் வாகனங்களை நிறுத்தி ரகளையில் ஈடுபடுவதாகவும், தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காவேரி காபி என்ற கடையில் வாகனம் நிறுத்தும் இடம் முறையாக விடப்படாமல் உள்ளதாகவும், க.ச. எண். 377ன் மேற்கு பகுதியில் 20 அடி அகலம் கொண்ட நீர்வழி பாதையினை ஆக்கிரமிப்பு செய்து தனிநபரால் கட்டிடம் கட்டி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவித்துள்ளமைக்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விபரத்தினை பின்வருமாறு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்படி புகார் தொடர்பாக மனுவில் தெரிவிக்கப்பட்ட காவேரி காபி கடை உரிமையாளர் திரு. நிஷாந்த், இறகு பந்து விளையாடுமிடத்தின் உரிமையாளர் திரு. ஆர். சங்கரன் மற்றும் மின்சார வாரிய அலுவலக கட்டிடத்தின் உரிமையாளர் ஆகியோருக்கு மேற்படி புகார் தொடர்பாக உரிய விளக்கம் சமர்ப்பிக்க தெரிவித்து நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி மூலம் 03.10.2024 நாளிட்ட அறிவிப்பு ந.க. எண். 156/2024-ஐ அனுப்பி உரிய விளக்கம் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரரின் புகாரின் அடிப்படையில் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட இறகு பந்து விளையாடப்படும் கட்டிடத்தின் உரிமையாளரை நேரில் அழைத்து போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவண்ணம் வாகனங்களை நிறுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்தவாறு விளையாட வருகின்ற நபர்கள் ஏதேனும் ரகளையில் ஈடுபட்டு குடியிருப்பு வாசிகளுக்கு இடையூறு ஏற்படுவதாக இனிவரும் காலங்களில் ஏதேனும் புகார் வரப்பெறும்

மேலும் கோவை மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காவேரி காபி கடை முறையாக வாகனம் நிறுத்தும் இடம் விடப்படாமல் கடை கட்டப்பட்டுள்ளதால், கடையின் முன்புறம் தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் வாகனங்கள் நிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் மேற்படி கடையின் உரிமையாளரையும் நேரில் அழைத்து போக்குவரத்திற்கு இடையூறாக வாகனங்கள் நிறுத்தக்கூடாது என எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பேரூராட்சி மூலம் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் சாலையில் போக்குவரத்திற்கு இடையூறாக வாகனங்கள் ஏதும் தற்போது நிறுத்தப்படுவதில்லை என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் புகார் மனுவில் தெரிவித்தவாறு சாலையினை ஆக்கிரமிப்பு செய்து வாகனங்கள் நிறுத்தப்படுவது இனிவரும் காலங்களில் தொடரும் பட்சத்தில் உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் க.ச.எண். 377-ல் 20 அடி அகலம் கொண்ட நீர் வழிபாதை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கட்டிடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், நீர்வழி பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்து கட்டிடம் கட்டப்படவில்லை என்ற விபரமும், மேற்படி கட்டிடமானது ஜோதி காலனி எக்ஸ்டென்சன் தெரு பகுதியில் கட்டப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடம் தனி நபருக்கு சொந்தமான இடம் என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. S. நாராயணசாமி மற்றும் எதிர்மனுதாரரான நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 31.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. S. நாராயணசாமி என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம், 2/11. ஜோதி காலனி என்ற முகவரியில் வசித்து வரும் எனது குடியிருப்புக்கு எதிராக நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 376-ல் இறகுபந்து உள்விளையாட்டு அரங்கு அமைக்கப்பட்டு, அரங்கிற்கு வரும் நபர்கள் எங்களது குடியிருப்பு பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி குடியிருப்புதாரர்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ரகளையில் ஈடுபடுகின்றனர்.

- இதே போல் புல எண். 377-ல் பேரூராட்சியின் அங்கீகாரம் பெறாமல் அமைக்கப்பட்ட 'காவேரி காபி' என்ற உணவகத்தில் பேரூராட்சியின் அனுமதியின்றி வாகனங்களை நிறுத்தி பொதுமக்களுக்கு போக்குவரத்து இடையூறு ஏற்படுத்துகின்றனர்.

- மேலும் புல எண். 377-ல் 20 அடி அகலம் கொண்ட நீர்வழிப் பாதை மீது கட்டடம் கட்டப்பட்டு, அதில் மின்சார அலுவலகத்திற்கு விதிமீறி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள அரசு அலுவலகத்தை முறைகேடாக வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் புகார்கள் குறித்து பேரூராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. மு. ஆனந்தன் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரர் திரு. S. நாராயணசாமி என்பவரின் வீட்டின் அருகிலுள்ள க.ச. எண். 376, மனை எண். 44-ல் வணிக வகைப்பாடு என அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டுள்ள கட்டடத்தில் இறகுபந்து விளையாடுபவர்கள் சாலையில் வாகனங்கள் நிறுத்தி ரகளையில் ஈடுபடுவதாக குறித்தான புகார் குறித்து, கட்டட உரிமையாளரை நேரடி விசாரணை மேற்கொண்டதில், பொதுமக்களுக்கு எவ்வித இடையூறு இல்லாமல் வாகனங்கள் நிறுத்தி வருவதாகவும் அவ்வாறு இடையூறு இருப்பின் என புகார் வரப்பெற்றால் வேறு இடத்தில் வாகனங்களை நிறுத்திக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளார். இருப்பினும் இதுபோன்ற புகார்கள் எதிர்காலத்தில் வரும்பட்சத்தில், காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உரிமையாளரிடம் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வணிக கட்டடத்திற்கு வாகன நிறுத்துமிடம் சம்பந்தமாக உரிய ஆவணங்களை பரிசீலித்து சட்டவிதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.
- கோவை மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள காவேரி காபி கடையில் வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான சாலையில் நிறுத்துவதாக வரப்பெற்ற புகாரினை குறித்து மேற்படி கடையானது அங்கீகாரமற்ற மனைப்பிரிவில் கட்டப்பட்டுள்ளது. அதில் கட்டப்பட்டுள்ள தரை தளம் சுமார் 1,900 சதுர அடி பரப்பளவிற்கு மட்டும் பேரூராட்சியால் கட்டட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் தளமானது சுமார் 1,900 சதுர அடியில் பேரூராட்சி அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டடங்களை மீண்டும் நேராய்வு செய்து சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும் கடை உரிமையாளரை நேரில் அழைத்து எச்சரிக்கை செய்யப்பட்டதன் விளைவாக தற்போது இடையூறாக சாலையில் எவ்வித வாகனங்களும் நிறுத்தப்படவில்லை. மேலும் எதிர்காலத்தில் இடையூறு ஏற்படின், காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காபி கடையின் உரிமையாளரிடம் எச்சரிக்கப்பட்டது.

மேலும் எதிர்காலத்தில் இடையூறு ஏற்படின், காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காபி கடையின் உரிமையாளரிடம் எச்சரிக்கப்பட்டது.

- க.ச. எண். 377-ல் நீர்வழிபாதை ஆக்கிரமித்து கட்டடம் கட்டப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வாடகை விடப்பட்டுள்ளது என்கிற புகாரினை குறித்து மேற்படி இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதில், நீர்வழி பாதையில் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை எனவும் மேற்படி இடமானது தனிநபருக்கு சொந்தமான இடம் எனவும், மேற்படி இடத்தினை 29.12.2006 நாளிட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க. எண். 392/2006-ல் மனை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது எனவும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரர் திரு. S. நாராயணசாமி என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. S. நாராயணணாமி என்பவர் தனது 10.06.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

(i) கோயம்புத்தூர் மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 376–ல் அமைந்துள்ள இறகு பந்து உள் விளையாட்டு அரங்கத்திற்கு விளையாட வரும் நபர்கள் அரங்கிற்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வாகனங்களை நிறுத்தி குடியிருப்புதாரர்களுக்கு இடையூறு ஏற்படுத்தியும் மற்றும் ரகளையிலும் ஈடுபடுகின்றனர்.

(ii) புல எண். 377–ல் காவேரி காபி கடையில் பேரூராட்சி அனுமதியின்றி வாகனங்களை நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துகின்றனர்.

(மற்றும்)

(iii) புல எண். 377–ல் அரசுக்குச் சொந்தமான நீர்வழிப் பாதையை ஆக்கிரமித்து தனிநபரால் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு முறைகேடாக வாடகை விடப்பட்டுள்ளது.

மேற்கண்ட புகார்களுக்கு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகின்றது:-

(1) நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட, புல எண். 376, 44-வது சைட் ஜோதி காலனி பகுதியில் இறகுபந்து அரங்கத்திற்கு வருபவர்கள் கூச்சல் போடுவது மற்றும் குடியிருப்புதாரர்களுக்கு இடையூறாக வாகனங்களை நிறுத்துவது குறித்து உரிய அறிவிப்பு நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் 03.10.2024 நாளிட்ட அறிவிப்பு ந.க. எண். 156/2024 மூலம் கட்டட உரிமையாளருக்கு எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்படி கட்டட உரிமையாளரும் தனது 07.10.2024 நாளிட்ட விளக்கத்தில் குடியிருப்புதாரர்களுக்கு எவ்வித இடையூறின்றி வாகனங்கள் நிறுத்தப்படும் எனவும், மீறி இது குறித்து புகார் வரப்பெறின், மாற்று இடத்தில் வாகனங்கள் நிறுத்த ஆவன செய்யப்படும் என தெரிவித்துள்ளதை பேரூராட்சி செயல்

அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் வாயிலாக தெரிய வருகிறது. எனினும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் (Part I(15) கட்டிட விதிகள், 2019 பிரிவு 35(4) மற்றும் இணைப்பு IV-ன்படி வாகனம் நிறுத்தம் அமையப் பெற்றுள்ளதை கள ஆய்வு மூலம் உறுதி செய்திடுமாறு பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

(2) புல எண். 377-ல் மின்சார வாரிய அலுவலகத்திற்கு வாடகை விடப்பட்டது தொடர்பாக பேரூராட்சி செயல் அலுவலரால் கள ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி இடத்தில் நீர்வழி பாதையினை எவ்வித ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும், மேற்படி இடமானது தனி நபருக்கு சொந்தமான இடம் என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது. இந்நிலையில் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை ஏற்று மின்சார வாரிய அலுவலகத்திற்கு வாடகை விடப்பட்டது குறித்த புகாரினை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(3) கோவை மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள காவேரி காபி என்ற கடையில் வாகனங்கள் நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்பதாக தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து, மேற்படி கடை உரிமையாளர் தனது 07.10.2024 நாளிட்ட கடிதத்தில் காவேரி கஃபே மற்றும் ரெஸ்டாரன்ட் என்ற உணவகத்தில் வாகனம் நிறுத்துமிடம் தனியாக அமைந்துள்ளதால் உணவகத்திற்கு வரும் வாகனங்கள் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் நிறுத்துவதால் எவ்வித இடையூறு இல்லையெனவும், இனிவருங்காலத்திலும் இடையூறு ஏற்படாது எனவும் உறுதி அளித்துள்ளதை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்த ஆவணம் மூலம் தெரிய வருகிறது. இருப்பினும் மேற்படி கடைக்கு 1900 சதுர அடி பரப்பளவில் முதல் தளமானது நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடம் குறித்து உரிய சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு நவம்பர் 13-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S. நாராயணசாமி,
2/11, ஜோதி காலனி,
நரசிம்மநாயக்கன்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 031

2) செயல் அலுவலர்,
நரசிம்மநாயக்கன்பாளையம் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்